**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் (பகுதி 04) - 2017**

-----------------------------------------------------------------------------------------------------

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதிய ஜீசீஎல் இலக்கம் (2014) 18 மொத்த இலக்கம் (521) மற்றும் 2017 திசெம்பர் 22 ஆந் திகதிய ஜீசீஎல் இலக்கம் (2015) 27 மொத்த இலக்கம் (566) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

-----------------------------------------------------------------------------------------------------

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்பாட்டில் இருக்கும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) நீடிப்பதனூடாக வர்த்தக நகர் (கொழும்பு) மற்றும் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கடற்துறைமுகம் (அம்பாந்தோட்டை) மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) என்பனவற்றிற்கிடையே தொடர்பினை பேனுதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் பகுதி 04 இன் கீழான அந்தரவேவ ஊடான மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 25 கி.மீ இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 55,965 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 55,615 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 435 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 350 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2016 சனவரி 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 சனவரி 19 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2019 ஜுலை 09 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான

தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப்பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன் உடன்படிக்கையானது 2017 திசெம்பர் 22 இல் தெற்கு அதிவேகப் பாதையில் நீடிப்பு மீதான ஆலோசனை சேவைக்காக இலங்கை அரசாங்கத்திற்கும் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையே ரூபா 3,458 மில்லியனுக்கு கையொப்பம் இடப்பட்டிருந்த போதிலும், அத் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் சிவில் வேலை ஆலோசகர் வேலையை ஆரம்பித்து 2015 செப்டம்பர் முதல் அவர்களது வேலைகளை செய்திருந்தனர். இருப்பினும், ஆலோசனை வேலைகள் எழும் எதிர்கால பொறுப்புக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டியின் பிரிவு 5.4.4(1) | மொத்தமாக ரூபா 10,431 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், பீஓகியுவ்விலுள்ள தற்காலிக தொகை உருப்படிகள் மற்றும் நிகழத்தக்கவைகளை தவிர்த்து முற்பணங்களை கணிக்கும் போதான அச்சிடல் தவறு காரணமாக, ரூபா 3,187 மில்லியன் மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | ஒப்பந்தத்தின் குறித்த நிபர்தனையின் உபபிரிவு 14.6 | ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் ஆகக் குறைந்த தொகை மொத்த ஒப்பந்த தொகையில் 01 சதவீதமாகும். இருப்பினும், குறித்த தேவைப்பாட்டிற்கு கீழான இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள், மதிப்பீட்டின் போது 03 நிகழ்வுகளளில் அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|
| | | | | 2017ம் ஆண்டின் போது | 2017 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி-சிவில் வேலைகள் | 412.0 | 52,156 | 15,085 | 15,081 | 23,742 |
| சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி-ஆலோசனை | 22.9 | 3,458 | - | - | - |
| ஜீஓஎஸ்எல் (பீஎம்யூஇ காணி சுவீகரிப்பு) | - | 350 | 116 | 116 | 156 |
| தேசிய சேமிப்பு வங்கி | - | - | - | 5 | 31 |
| சம்பத் வங்கி | - | - | - | 37 | 37 |
| மொத்தம் | 434.9 | 55,964 | 15,201 | 15,239 | 23,966 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிவில் வேலைகள் மற்றும் காணி சுவீகரிப்பின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் முறையே 70 சதவீதம் மற்றும் 62 சதவீதமானதுடன் முறையே பௌதீக செயலாற்றல் 62 சதவீதம் மற்றும் 49 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பெற்றிருந்தது. எனவே, செயற்திட்டமானது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளிற்கு சற்று பின்னாக இருந்தது.

(ஆ) செயற்திட்டமானது 2019 ஜுலை 09 அளவில் பூர்த்தி செய்யப்பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 செப்டம்பர் 30 இல் உள்ளவாறான செயற்திட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 96 சதவீதத்திற்கு எதிராக அடையப்பெற்ற செயலாற்றல் 81 சதவீதமானதுடன் அதனால் இலக்கமிடப்பட்ட திகதிக்குள் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வது நிச்சமற்றதாகும்.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**-----------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயலாற்றல் உத்தரவாதத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கோள் காட்ட ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக அளவைப் பட்டியலில் செய்யப்பட்டிருந்த வேறான கொடுப்பனவு உருப்படிகள், உரிய ஒப்பந்ததாரரின் செலவில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த பொது நிபந்தனைகள் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி, மொத்தமாக ரூபா 11.64 மில்லியன் ஒப்பந்ததாரரினால் பெறப்பட்ட செயலாற்றல் பாதுகாப்பிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அன்றாட வேலை நிகழ்ச்சித் திட்டங்கள் ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் பொறுப்புடைய உத்தியோகத்தர்களின் மந்தகாதியான நெருங்கிய கண்காணிப்பு காரணமாக அந் நிகழ்ச்சித் திட்டங்களுடன் உரிய காலத்திற்கு முறையாக செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கான நிர்மாத்தின் முக்கிய தேவைப்பாடுகள் மற்றும் டால் அமைப்பின் நிறுவல் என்பன 2018 ஒக்டோபர் 12 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக களவிஜயத்தின் போது கூட வடிவமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விரயமான தடமறியலின் தயாரிப்பு 2014 ஒக்டோபர் 23 இல் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், தெற்கு அதிவேக பாதை நீடிப்பு செயற்திட்டத்தின் பிரிவு - 04 இன் அடிச்சுவட்டின் சட்டரீதியற்ற அகழ்வாராய்ச்சியை நிறுத்தி தொழில் வழங்குனராலோ செயற்திட்டத்தினாலோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுறோக, மேலதிக தொகை ரூபா 386.6 மில்லியன் காணியை முடுவதற்கு செயற்திட்டத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) சமூக மற்றும் சுற்றுச்சூழல், மனநிறைவு மற்றும் காணி சுவீகரிப்பு போன்றவற்றிற்கான ஆலோசகர் பதவி செயற்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ரூபா 1.32 மில்லியன் தொகையான சம்பளம் பீஓசியுவ் உருப்படி இல 109(1) இனூடாக அப் பதவிகளிற்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.